1992 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் வேலைநிறுத்தம் செய்கிறார்கள் என்ற கேள்வியைக் கேட்ட மாண்புமிகு உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்கள் Justice delayed is justice denied என்று சொன்னார்கள் 'Justice hurried is Justice buried' என்பதும் அங்கேதான் உள்ளது. வழக்கறிஞர்கள் வழக்குக்கு முன்னிலை ஆகிறேன் என்று வழக்காடுபவர்களிடம் வக்காலத்து பெற்றுவிட்டு அந்த வக்காலத்தை நீதிமன்றத்திலே தாக்கல் செய்துவிட்டு, அந்தக் கட்சிக்காரர்களுக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல், அந்தக் கடமையிலிருந்து தவறுகிறார்கள் என்றால், அது Professional misconduct' அதாவது கடமையிலிருந்து தவறியதாகக் கருதப்படுகிறது. அந்த அடிப்படையிலே 1961 வது ஆண்டில் வழக்கறிஞர்கள் சட்டத்தின் 35வது பிரிவின்படி அந்த வழக்கறிஞர்கள் கடமையிலிருந்து தவறியதாகக் கருதப்படுவார்கள் என்று பார் கவுன்சிலுக்கு நோட்டீஸ் அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது குடியாத்தம் சம்பந்தமான பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சினையில் சத்தும் இருக்கிறது. அவர்கள் தனிக்கேள்வியாகக் கேட்டால் இன்னும் பல விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அதை முழுமையாக, Comprehensive reply யாகக் கொடுப்பதற்கு வாய்ப்பாக, வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 280 மற்றும் 281, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன. வினா எண் 282, திரு. எம். தங்கவேல்— மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்— திரு. எம். தங்கவேல் இருக்கையில் இல்லை. திரு. ம. சின்னசாமி.

282—

ஆறுநாட்டு வேளாளர் இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

*5394 திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1992 மார்ச் 20

நீண்டகாலக் கோரிக்கையாக இருந்துவரும் ஆறு நாட்டு வேளாளர் இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-40

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறுநாட்டு வேளாளர்கள் தங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்த வெள்ளாளர்களில் காரைக் காட்டு வெள்ளாளர், சோழிய வெள்ளாளர், கொடிகால் வெள்ளாளர், துளுவ வெள்ளாளர், சைவ வெள்ளாளர், இஞ்சங்கட்டி பிள்ளை வெள்ளாளர் என்று ஆறு பிரிவினர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள். ஆகவேதான் ஆறுநாட்டு வேளாளர் தங்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதிலே ஒரு சிலர் மாத்திரம் சமூகத்திலே சற்று வசதியாக இருக்கிறார்கள். மற்றவர்கள், மற்ற சமூகத்தினரைப் போல பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே இவர்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு ஆறுநாட்டு வேளாளர் போன்ற பல பிரிவினர்களுடைய வேண்டுகோளை, கோரிக்கைகளை மிக விரிவாக ஆராய்ந்திருக்கிறது. அதிலே ஆறுநாட்டு வேளாளர் வகுப்பினரின் சமூக, கல்வி குறித்த ஆய்வின்படி இவ்வகுப்பினர் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கத் தகுதி பெறாத முற்பட்ட சாதியாகக்கண்டறியப் பட்டிருக்கிறது. ஆகவேதான் அந்த பட்டியலில் இரண்டாவது பிற்பட்டோர் நலக் குழு சேர்க்கவில்லை. அதையொட்டித்தான் அரசு ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பல்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள் தங்களைப் பிற்பட்டோர் பட்டியலிலேயும், மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலும் சேர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்துக் கொண்டு இருக்கின்றனர். இதன் தொடர்பான வழக்குகள், ஒன்று உச்ச நீதி மன்றத்திலும், ஒன்று உயர்நீதி மன்றத்திலும் நிலுவையில் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் தீர்வு கண்டதற்குப் பிறகுதான் அரசு இதைப் பற்றிய மறுபரிசீலனையிலே ஈடுபட முடியும்.